* திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, குத்தாலம், குடவாசல் ஆகிய பகுதிகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் அரிசி கிலோ ரூ. 2.20, ரூ. 2.40 ஆக விற்பதாகத் தகவல் வந்ததன் பேரில் நேற்று முன்தினம்—3—8—1977 அன்று நான் தஞ்சை சென்று, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களையும், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி அவர்களையும் சந்தித்து அரிசி தட்டுப்பாடுள்ள இடங்களையும் அரிசி நியாய விலையில் கிடைக்காத இடங்களையும் எடுத்துச் சொல்லிய பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அரசையும், குறிப்பாக மாண்புமிகு உணவு அமைச்சரவர்களையும் கலந்துகொண்டு ஆவன செய்வதாகச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் விவசாயிகளுக்கும், ஏழை மக்களுக்கும் நியாய விலையில் அரிசி கிடைக்க நியாய விலைக் கடைகள் திறக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, முக்கியமான பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி வழங்கப்படுகிறது. என்றாலும், அரசுக்கு வந்திருக்கின்ற குறிப்பைப் பார்க்கும்பொழுது, பொதுமக்கள் நியாய விலைக் கடைகளில் போய் அரிசி வாங்குவது குறைவாக இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே நியாய விலைக் கடைகளில் போடப்படுகின்ற அரிசியை ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் பயன்படுத்திக் கொண்டால், அதுவே போதும் என்று அரசு கருதுகிறது.

(ஆ) மழை இல்லாத காலங்களிலும், வட ஆற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள கிராமங்களில் கூட்டுறவு சங்கக் கடன் பாக்கிக்காக சொத்துக்களை ஜப்தி செய்வதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, . . .

(திரு. மா. மணிமாறன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கவன ஈர்ப்புத் தீர்மானம். தீர்மானத்தைக் கொடுத்தவர் மட்டும்தான் அதைப் படிக்க வேண்டும்.

1977 ஆகஸ்ட் 5]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், 23—7—1977 ஆம் தேதியன்று, இது தொடர்பாக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இது ஒன்றும் அவசர முக்கியத்துவம் வாய்ந்ததல்ல, சகஜ நிலைமை கொண்டது தான் என்று தீர்மானம் எனக்குத் திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறது. இப்போது அதே பிரச்னை கவன ஈர்ப்புத் தீர்மானமாக எழுப்ப அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஏன் இந்த தவறு ஏற்பட்டது என்று விடையளிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது ஒத்தி வைப்புத் தீர்மானம். இப்போது வந்திருப்பது கவன ஈர்ப்புத் தீர்மானம். கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பதால் அனுமதித் திருக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, கலசப்பாக்கம் தொகுதியில் நான்கு ஆண்டு காலமாக மழை இல்லாமல் போய், இப்போது ஆடி மாதம் கடுமையான வறட்சி, அங்கே கூட்டுறவு அதிகாரிகள் கடன் பாக்கிக்காக கடுமையான நடவடிக்கை எடுக்கிறார்கள். குறிப்பாக போளூர் வட்டம் கரப்பூண்டி கிராமத்தில் செல்லக்குட்டி உடையார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படியுங்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பிறகு, நீங்கள் கேட்க வேண்டியதைக் கேட்கலாம்.

* திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, "மழை இல்லாத காலங்களிலும், வட ஆற்காடு மாவட்டம், கலசப் பாக்கம் தொகுதி, மட்டவெட்டு, கரப்பூண்டி மற்றும் பல கிராமங் களில் கூட்டுறவுச் சங்கக் கடன் பாக்கிக்காக சொத்து மற்றும் மாடு முதலியவைகளை ஜப்தி செய்வதால் மக்களிடையே ஏற்பட் டுள்ள பீதியைக் குறித்து," மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

268 மழை இல்லாத காலங்களிலும் வட ஆற்காடு மாவட்டம் கலச பாக்கம் தொகுதியில் உள்ள கிராமங்களில் கூட்டுறவு சங்கக் கடன் பாக்கிக்காக சொத்துக்களை ஜப்தி செய்வதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி குறித்து

[1977 ஆகஸ்ட் 5

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: கலசப்பாக்கம் சட்ட மன்றத் தொகுதியில் மொத்தம் 122 கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் உள்ள விவசாயிகளின் விவசாய கடன் தேவைகளை 17 கிராமக் கூட்டுறவு நாணய சங்கங்கள் அளித்து வருகின்றன.

மட்டவெட்டு கிராமத்திற்கான விவசாய கடன் தேவைகளை கடலாடி கூட்டுறவு கிராம நாணய சங்கமும் காப்பூண்டி கிராமத் திற்கான விவசாயக் கடன் தேவைகளை காப்பூண்டி கூட்டுறவு விவசாய வங்கியும் அளித்து வருகின்றன. மேற் குறிப்பிட்ட இரண்டு கூட்டுறவு சங்கங்களின் விவகார எல்லைக்குட்பட்டுள்ள கிராமங்கள் வறட்சிப் பகுதிகள் என அறிவிக்கப்படவில்லை. எனவே இந்த இரண்டு கூட்டுறவு சங்கத்திலுள்ள உறுப்பினர் களுக்கு அவர்கள் பெற்ற குறுகிய கால விவசாயக் கடன்களை மூன்று வருட தவணைகளில் சங்கத்திற்கு இருசால் செய்ய வேண்டிய மத்திய காலக் கடன்களாக மாற்ற சலுகைகள் தரப்படவில்லை. வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட வருவாய்த்துறையினரால் 37 பைசா (அல்லது) அதற்கு குறைவென அனுவாரி சான்றிதழ் வழங்கப்பட்ட 48 கிராமங் களுக்கு கடன் வசதி அளிக்கும் 9 கூட்டுறவு கிராம நாணயச் சங்கங்களில் உள்ள மொத்தம் 295 உறுப்பினர்களுக்கு ரூ. 3.14 இலட்சம் அளவுக்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ளன.

2. மட்டவெட்டு, காப்பூண்டி கிராங்கள் வறட்சிப் பகுதிகள் என அறிவிக்கப்படவில்லை. இந்த கிராமங்களில் கடன்கள் வசூ லிக்க நடவடிக்கை எடுத்ததன் காரணம், சம்பந்தப்பட்ட கிராம கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களின் மொத்த கேட்புத் தொகைக்கு செலுத்த வேண்டிய கடன்கள் 50 சதவீதத்திற்கு குறைவாக இல்லையெனில், கடன்களை தவணைத் தேதிகளில் முறை யாக செலுத்தும் அங்கத்தினர்களும் அடுத்த போகத்திற்கு விவ சாயக் கடன் பெறும் வாய்ப்பை இழக்க நேரிடுகின்றது. கூட் டுறவு சங்க கடன் வசூலில் வறட்சி இல்லாத பகுதிகளிலும்கூட தீவிர நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும், பொதுவாக உறுப் பினர்களை இணங்கவைத்தே கடன் வசூல் செய்ய வேண்டும்

1977 ஆகஸ்ட் 5] [திரு. க. உரா. எட்மண்ட்]

என்றும், தீவிரமாக நடவடிக்கையை மிகவும் வசதி படைத்த நிலச்சுவான்தார்கள் மேல் மட்டுமே கடைசி வழியாக எடுக்கலாம் என்றும் 1977-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர சிறு விவசாயிகள் மீது கடன் வசூலில் தீவிர நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் சிறு விவசாயிகளிடம் கடன் வசூல் செய்யும்போது அதிக பட்ச சலுகை காட்டி அவர்கள் சிறு தொகைகளை பல தவணைகளில் இருநால் செய்தாலும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

4. கடன் வசூல் நடவடிக்கையில் கீழ்க்கண்ட மூன்று கடன்களில் மட்டுமே அசையும் சொத்துக்கள், சப்தி செய்யப்பட்டன

(1) திரு. சின்னக்கண்ணுக் கவுண்டர், மட்டவெட்டு கிராமம் (கடலாடி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்).

(2) திரு. மாசிலாமணி உடையார், மேல்பாலூர் (கடலாடி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்).

(3) திரு. இராசகோபால், மேல்பாலூர் (கடலாடி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்).

இவைகளில் இரண்டு கடன்கள் வசதி படைத்த நிலச்சுவான்தார்கள் திரும்ப சங்கத்திற்கு செலுத்தவேண்டியதாகும். ஒரு கடன், சிறு விவசாயி சங்கத்திற்கு செலுத்த வேண்டியதாகும். திரு. சின்னக்கண்ணு கவுண்டருக்கு, 1971 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து ரூ. 3,991 கடலாடி கிராம கூட்டுறவு கடன் சங்கத்தில் தவணை தவறிய கடன் பாக்கி நிலுவையாக உள்ளது. இவர் மிகவும் வசதி படைத்த விவசாயி. இந்த கடனுக்கு இவர் மீது தீவிர வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக இவர் ரூ. 150, சங்கத்திற்கு செலுத்தியவுடன் இவரிடமிருந்து சப்தி செய்யப்பட்ட பசு திரும்ப தரப்பெற்றது. இது போலவே வசதி படைத்த விவசாயியான மேல்பாலூர் கிராமம் மாசிலாமணி உடையார் கடலாடி கூட்டுறவு சங்கத்திற்கு திரும்ப செலுத்த வேண்டிய தவணை தவறிய பாக்கி ரூ. 2,053 ஆகும். இதற்காக தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கன்றுகள் சப்தி செய்யப்பட்டன. ஆனால் பகுதி ரூ. 200 இவர் கடன் பாக்கிக்காக செலுத்தியவுடன் கன்றுகள் இவரிடம் திருப்பித் தரப்பட்டன. மேலே கூறியபடி இந்த இரண்டு கடன்களில் அதிகமான சலுகை காட்டப்பட்டுள்ளது.

மேல் பாலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. இராசகோபால் என்ற உறுப்பினரைப் பொறுத்தவரையில், இவர் சங்கத்திற்கு செலுத்தவேண்டிய பாக்கி 1,171 ரூபாய்க்காக, இவர் சிறு விவசாயி என்ற விவரம் தெரியாத நிலையில், 26—6—1977-ல் இரண்டு எருதுகள் சப்தி செய்யப்பட்டுவிட்டன. ஆனால், இவர் சிறுவிவசாயி என்ற விவரம் தெரிந்தவுடனே இவரிடம் இருந்து ஜப்தி செய்யப்பட்ட எருதுகள் இவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு கூட்டுறவு மத்திய வங்கியின் சிறப்பு அலுவலரால் சம்பந்தப்பட்ட விற்பனை அலுவலரின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(5) மேலும் இது தொடர்பாக, வறட்சி பகுதியில் கடன் பெற்றவர் மீது தீவிர நடவடிக்கை எடுக்கக்கூடாதென்றும் ஏனைய பகுதிகளில் ரூ. 2000 க்குக் கூட்டுறவு நாணய சங்கத்தில் கடன் பெற்றிருந்தாலோ அல்லது ரூ. 5000 க்கு குறைவாக கூட்டுறவு நிலவள வங்கிகளில் கடன் பெற்றிருந்தாலோ அந்த சிறு விவசாயிகள் மீது வசூல் பணியில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்றும் கடன் வசூலில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களுக்கு 2—7—1977-ல் திரும்ப ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர ஏனைய உறுப்பினர்களின் கடன்களிலும் கடன்கள் நிலுவை நிற்கும் காலத்தைப் பொறுத்து அவ்வரிசையில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விளக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பெரிய விவசாயிகளிடம் வசூலிப்பதுபற்றி இல்லை. சிறு விவசாயிகளிடம் கடுமையான முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். பல அதிகாரிகள் கடன் வசூலிக்கிற நேரத்தில் ப்யூஸ் காரியர்களை எல்லாம் எடுத்து வந்திருக்கிறார்கள். மாடுகளை ஜப்தி செய்து வந்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் தவிர்க்க வேண்டும் என்று தங்கள் மூலம் நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: வாசித்த அறிக்கையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அப்பேர்ப்பட்ட உத்தரவை அரசு பிறப்பித்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டிருக்கிறேன்.